# கிறித்தவ இலக்கியம் – அடிமை மக்களை மீட்டெடுத்த மீட்பரசி (யூதித்து)

*முனைவர் தா. ஜோன்ஜெயந்தி*
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி
https://doi.org/10.5281/zenodo.15526551

**ஆய்வுச் சுருக்கம்**
*பெத்தூலியா நகரில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவளும், செல்வச் செழிப்பும் பேரழகும் நிறைந்தவளுமாகிய யூதித்து என்பவள் தனது கணவனின் மறைவுக்குப் பின் துறவற வாழ்க்கை நடத்தி வந்தாள். அடிப்படையில் அவள் இறைப்பற்றுமிக்க கைம்பெண்ணாகவும் காட்சியளிக்கின்றார்.*

*இளவரசிவேடம்தரித்தயூதித்ததலைவர்கள், மூப்பர்கள், மக்களின் ஆசிபெற்ற இரவுப்பொழுதில் தனது பணிப்பெண்ணை அழைத்துக்கொண்டு மலை மீது பாசறையில் தங்கியிருந்த ஓலோபேரினைச் சந்திக்கப் புறப்பட்டாள். ஓலோபெரின் யூதித்திடம் தன்னை இழந்ததால் யூதித்துக்கு வாள் வித்தைக் கற்றுக்கொடுக்கும்போது யூதித்து வீசிய வாள் ஓலோபெரினின் தலையைத் துண்டித்தது. தலையில்லா முண்டமாக குருதியில் மிதந்தது ஓலோபெரினின் உடல். யூதித்து வெட்டிய தலையை தன்னோடு வந்த தன் தோழியிடமிருந்து உணவுப் பையில் மறைத்து வைத்துக் கொண்டு பெத்தூலியாவிற்குச் செல்கின்றார். அங்கே சென்றபின் அந்நகரின் மதிற்சுவரின் மேல் அத்தலையைத் தொங்கவிட்டு, தம் ஊர் மக்களிடம் அசீரியர்களைச் சென்று தாக்குமாறு ஆணையிடுகின்றார். அசீரியர்கள் தங்கள் படைத்தலைவரின் தலை வெட்டப்பட்டதைக் கண்டு புறமுதுகு காட்டி ஓடுகின்றனர்.*

*உலகக் கொடுந்தளபதியான ஓலேபெரினைக் கொன்று இஸ்ரயேலரக்கு மீட்பைக் கொண்டர்ந்த யூதித்து, இஸ்ரயேலர் தனக்கு வழங்க வந்த செல்வங்கள் அனைத்தையும் பெற மறுத்தாள். முடிவில் இஸ்ரயேலர் வெற்றியில் திரட்டிய செல்வங்கள், அவர்களது செல்வங்கள், யூதித்தின் உடைமைகள் அனைத்தையும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க அன்புக் கட்டளையிட்டாள். யூதித்து, அவ்வண்ணமே நிகழ்ந்தேறிய பின் மக்களுக்கு ஆசி வழங்கிய யூதித்து துறவுக் கோலம் தாங்கி எருசலேம் தேவாலயத்துள் நுழைந்தாள்.*

***கலைச்சொற்கள்:*** *யூத, இனம், செல்வம், அடிமை, இஸ்ரயேலர், போர், தலைமை, மன்றாடல், நோன்பு, திட்டம், மீட்பு, கைம்பெண், வீரச்செயல்*

**முன்னுரை**

*மீட்பரசி நூலின் வரலாற்றைக் கவிஞர் லோட்டஸ் எடிசன் காப்பியமாகப் புனைந்துள்ளார். இக்காப்பியம் 2002-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் திக்கணம் கோடு என்னும் ஊரிலுள்ள திரேசா நூல் ஆலயத்தின் மூலம் வெளிவந்துள்ளது. ஆசிரியர் பற்றியதான வேறு செய்திகள் தரப்படவில்லை.*

*மீட்பரசி காப்பியம் நான்கு காண்டங்களால் ஆனது. இக்காப்பியத்தல் 625 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கல்வி விருத்தம் போன்ற யாப்பமைப்பில் அமைந்துள்ளன.*

*யூதித்து என்னும் இந்நூல் யூத சமயம் சார்ந்த காவியமாகக் கருதப்படுகிறது.*

*இக்காவியத்தின் மூலவரலாறு எழுதப்பட்ட காலம் ஏறத்தாழ கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி எனக் கூறுகிறார்கள்। ஒரு யூதப் பெண்ணின் கையால் அயல்நாட்டு மன்னன் வீழ்த்தப்பட்டு யூத மக்கள் அடைந்த வெற்றியைக் கூறும் விதத்தில் இந்நூல் அமைந்துள்ளது. மூலநூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.*

*எபிரேயத்திலும் ஆங்கிலத்திலும் யூதித்து என்னும் சொல்லுக்கு யூதப் பெண் என்பது பொருள். இந்நூலின் தலைவி ஒரு கைம்பெண்ணாக இருந்தாலும், தமக்கிருந்த செல்வம், செல்வாக்கு இவற்றை மறந்துவிட்டுத் தம் இனத்தை ஒழிக்க வந்த ஒலோபேரின் என்ற படைத்தலைவனை, அவன் கூடாரத்திற்கே சென்று கொல்வது இந்நூலுக்கே அமைந்த சிறப்பாகும். திருவிவிலியத்தின் புரட்சிப் பெண்ணாக யூதித்து என்ற ஒப்பற்றக் கதாபாத்திரத்தைத் தமிழில் எழுத்துக்களால் அறிமுகம் செய்துள்ளார் ஆசிரியர் லோட்டஸ் எடிசன் அவர்கள். மீட்பரசி என்ற இணையற்ற காவியத்தைப் புதுமையான அணுகுமுறையோடு புனைந்துள்ளார்[2] என்று எ.எம்.சின்னப்பா வாழ்த்துரையில் கூறியுள்ளார்.*

*யூதித்து என்ற வீர மங்கை மீட்பின் வரலாற்றில் தடம் பதித்தவள். அவரை மீட்பரசியாக்கி அரியணை வீற்றிருக்கச் செய்துள்ளது இந்நூல். கி.மு.ஆறாம் நூற்றாண்டிலிருந்து முதலாம் நுஸற்றாண்டு வரையுள்ள யூதர்களின் வரலாறு இருள் படர்ந்தது. அக்காலகட்டத்தில் அடிமைத்தனத்தின் விடிவுக்காக ஏங்கித் தவித்த மக்களைக் கடவுள் காத்தருள்கின்றார். அச்சூழல்கள் தான் வீரர்களை, வீராங்கனைகளைத் தோற்றுவிக்க அடித்தளமாகின்றன. அவ்வாறு தோன்றிய காப்பியங்களுள் ஒன்றுதான் யூதித்து. அவள் மக்களின் துயரில் பங்கு கொண்டாள். யூதித்திற்குச் செல்வமிருந்தும் செருக்குயரவில்லை. தன் மக்களைக் காக்க தன் இன்னுயிரைப் பணயம் வைத்ததோடு போர்கொள்ள வந்த நெபுகத்நேசனின் தளபதி ஒலோபெரினைச் சந்தித்து சாகசம் புரிகிறாள். சிரசைச் சிதைத்துச் சிறைப்பட்ட இஸ்ரயேலை மீட்கிறாள். இதைப் 1. போர்க்காண்டம், 2. அறத்துக் காண்டம், 3. வெற்றிக் காண்டம், 4. விடுதலைக் காண்டம் எனப் பிரித்து அரியதொரு காவியம் படைத்துள்ளார் லோட்டஸ் எடிசன்.*

## ஒருங்கிணைந்த இஸ்ரயேலர்

*இஸ்ரயேல் மக்கள் இறைபெருமானைத் தெய்வமாகக் கொண்டவர்கள். இறைபெருமான் என்பது பழைய எற்பாட்டு ஆகமங்களில் கூறப்படுகிற நாமமான பிதா, கர்த்தர், தேவன் ஆகியன ஆகும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, என்றும் பிதா என்பது கி.மு. காலங்களில் கூறப்படகிற நாமம். குமாரன் என்பது கி.பி. கூறப்படுகிற நாமம் பரிசுத்த ஆவி என்பது நிகழ்காலத்திலே கூறப்படுகிற நாமம். ஏனென்றால் இறைவன் மூன்றில் ஒன்றாய் இருக்கின்றார்.*

*இந்த இஸ்ரயேல் மக்கள் பன்னிரண்டு கோத்திரங்களை உடையவர்கள். அவ்வாறு இருந்தாலும் உணர்வுகளால் பிரிந்தவர்களாகக் காணப்பட்டவர்கள். இஸ்ராயேல் என்றாலே இறைப்பற்று, அன்பு, தூய்மை, அமைதி அனைத்தும் அடங்கிய இறைப்பற்றாளர்கள். இவர்கள் கடவுள் தாம் இறைபெருமான் (பிதா) மனிதர்களை மீடடு உயர்நிலையை அடையவும், இறைவனின் திட்டங்களை நிறைவேற்றிடவும் இஸ்ரயேல் மக்களை இறைவன் தெரிந்துகொண்டார்.*

## இஸ்ரயேல் மக்களை மீட்கும் மீட்பரசி யூதித்து

*யூதித்து மெராரியின் மகள், யூதித்தின் கணவர் மனாசே. இவர்கள் இரவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள். வாற்கோதுமை அறுவடைக் காலத்தில், வயலில் மேற்பார்வை செய்துகொண்டிருந்த போது கடும் வெயில் தாக்கத்தால் மனாசே உயிர் துறந்தார். யூதித்து கைம்பெண்ணானாள்.*

*அக்காலத்தில் (கி.மு.539-400 - ஆறாம் நூற்றாண்டிலிருந்து முதலாம் நூற்றாண்டு வரை) கைம்பெண்களும், அனாதைகளும் சமுதாயத்தினாலே புறக்கணிக்கப்பட்டவர்கள். எனவே பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரும், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவும் கைம்பெண்டிர் சார்பில் குரல் கொடுப்பதாக3 என்று எஸ்.மைக்கேல் இருதயம் தன்னுடைய திருவிவிலிய விளக்கம் நூலில் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது.*

*யூதித்து கைம்பெண்ணான பின்தன்வீட்டின் மேல் அறையில் கூடாரம் ஒன்று அமைத்து, கைம்பெண்ணுக்கான ஆடைகளை அணிந்து (சாக்குடை) கொண்டு இறைவனுக்கு நோன்பிருந்தாள். பார்வைக்கு அழகானவர், தோற்றத்தில் எழில்மிக்கவர். மங்கையருள் தங்கம் என்று அழைக்கப்படுபவர். ஏனென்றால், பெண்களுக்குரிய நற்புண்புகள் அனைத்தையும் ஒருங்கெ பெற்றவள். நீதிமொழிகள் 31-ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பெண்ணுக்கான கடமைகளைச் சிறப்பாகச் செய்பவள்.*

*சாமக்கோழி கூவையிலே விழித்தெழுந்து கடமையாற்றுபவள். உழைப்போர் உறவினை வளர்ப்பவள். சுரண்டும் முதலைகளை எதிர்ப்பவள். அநியாயத்தினை அழிக்கப் போராடுபவள். தீமையின் எதிரி. கணவனை இழந்த யூதித்து துறவினைப் பூண்டு மக்கள் சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறாள்.*

**யூதித்து இறைவனிடம் மன்றாடுதல்**

*இஸ்ரயேல் மக்கள் தண்ணீர்ப் பஞ்சத்தால் சோர்வுற்று கடவுளின் மீது உள்ள நம்பிக்கையை விட்டு நெபுகத்னேசரிடம் அடிமையாகிவிடலாம் என்று எண்ணிய செய்தி யூதித்திற்குச் செல்கிறது. அவள் இஸ்ரயேல் மக்களின் தலைவர்களை அழைத்துப் பேசு கிறாள். மூப்பர்களைப் பார்த்து இஸ்ரயேல் மக்களை எதிரிகளிடம் ஒப்படைத்தாக முடிவு எடுத்துள்ளீர்கள். கடவுள் மீது உள்ள பற்று எங்கே போயிற்று? கடவுளை சோதிக்க நீங்கள் யார்? என்று சாடினார். நம் ஆண்டவரைத் தவிர வேறு கடவுளை அறிந்ததில்லை. எதிரிகள் மனிதர்களை அச்சுறுத்தலாம். கடவுளை அச்சுறுத்த முடியாது. நம் முதாதையர்கள் சோதிக்கப்பட்டார்கள். (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு) ஆனாலும் நம் கடவுள் அவர்களைக் கைவிடவில்லை. அதுபோல நாமும் கடவுளிடம் மன்றாடுவோம். இந்தத் தண்ணீர்ப் பஞ்சத்தை மாற்றி மழை பொழியச் செய்வார். நான் சொல்வதைக் கேளுங்கள். அண்டவர் என் வழியாக இஸ்ரயேலை விடுவிப்பர் என்று யூதித்து கூறினார். யூதித்து கூறியதற்குத் தலைவர்கள் இசைவு தருகின்றனர்.*

*இஸ்ரயேல் மக்களின் அச்சத்தைப் பேர்ககி இறைப்பற்று வழியாக அவர்களுக்கு மனதைரியத்தை ஊட்டுவதனை இப்பாடல் வழி அறியமுடிகின்றது.*

*யூதித்து இஸ்ரயேல் மக்களை மீட்க இறை வேண்டலில் தன்னை உட்படுத்துகின்றாள். மனப்போரை அறப்போராய் மாற்றுகின்றாள். கடவுளே வந்து போரிட அழைக்கின்றாள். இல்லையெனில் தெய்வத்தின் சக்தியைக் கேட்கின்றாள். கைம்பெண்ணாகிய எனக்கு செவிசாய்த்தருளும். அசீரியர்கள் பெருந்திரளான படையோடு வந்திருக்கிறாள். அவர்களுடைய படை வலிமைமிக்கது. அவர்களின் படைவீரர்களைக் கண்டு இறுமாப்புக் கொண்டுள்ளார்கள். ஆண்டவரே அவர்கள் வலிமைய அடக்கிவிடும் அவர்களின் இறுமாப்பை அழித்துவிடும் அவர்கள் மேல் உமது சினத்தைக் கொட்டும் எனது திட்டத்தைச்செயல்படுத்தக் கைம்பெண்ணாகிய எனக்கு வலிமை தாரும். என் உதடுகளின் வஞ்சனையால் அடிமையை அவனுடைய ஆளுநனோடும், பணியாளனோடும் தாக்கி வீழ்த்தும் அவர்களது செருக்கை ஒரு பெண்ணின் கை வன்மையால் நொறுக்கிவிடும்.*

*நீரே கடவுள் என்றும் எல்லா ஆற்றலும் வலிமையும் கொண்ட கடவுள் என்றும், தாழ்ந்தோரின் கடவுள் என்றும், நம்பிக்கையற்றோரின் மீட்பர் என்றும் இஸ்ரயேல் மக்களின் பாதுகாவலர் என்றும்*

உம்மைத் தவிர வேறு தெய்வம் எவரும் இல்லை என்றும் அறியச் செய்யும் என்று யூதித்து வேண்டிக்கொண்டாள்.

**யூதித்து துறவுகோலம் அகற்றல்**

அடிமைத்தனத்தினின்று தன் மக்களை மீட்பதாயினும் சான்றோர் பழித்திடும் செயலை யூதித்து செய்கின்றாள்.

யூதித்து ஒப்பனை செய்து ஏமாற்றுகின்றாள். இது பலருக்கு நன்மை பயப்பதாயினும் அது தவறே என்பதை யூதித்திற்குள் இருந்தாலும் ஆண்டவனிடம் நடிப்பினைப் பொறுத்து நீ கேடயம் தந்திடு என வேண்டுவது இந்நூலுக்குச் சிறப்பாக அமைந்துள்ளது.

**எதிர்படையை நோக்கி வீராங்கனை**

தன் குடிகளை மீட்டிட யூதித்து இஸ்ராயேல் கடவுளை நோக்கி மன்றாடி பின் தன் கைம்பெண் ஆடையைக் களைந்து, நீராடி, விலையுயர்ந்த நறுமண எண்ணெய் பூசி தன்கணவன் இருக்கும்போது எப்படியெல்லாம் தன்னை அலங்கரித்துக் கொண்டு இருந்தாளோ அதபோலவே அலங்கரித்துக் கொண்டாள். தேவையான உணவுகளைத் தானே எடுத்துக்கொண்டு தன் பணிப்பெண்ணையம் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். இஸ்ராயேல் மக்கள், தலைவர்களும் நம் மூதாதையரின் கடவுள் உன்னோடிருந்து உன் திட்டங்களை நிறைவேற்றுவாராக என்று வாழ்த்தினார்கள்.

தன் பணிப்பெண் மரியாவுடன் ஒலே பெரினுடைய பாசறையை நோக்கிச் செ ன்றார்கள். வழியில் ஒற்றர்கள் இவர்களைத் தடுக்க நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறாய்? எங்கு செல்கிறாய்? என்று வினவினார்கள். அதற்கு யூதித்து நான் எபிரேயப்பெண். அவர்களிடமிருந்து தப்பி வந்துள்ளேன். உங்களுக்கு உதவுவேன். இஸ்ராயேல் மக்களை எப்படிக் கைப்பற்றுவது என்பதைக் கூற வந்திருக்கிறேன். உன் படைத்தளபதியிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள் என்று சாதுரியமாகப் பேசுகின்றாள். அந்தப் போர் வீர்கள கண்டு வியக்கும் வண்ணம் எழில் பூக்க தளபதியிடம் அழைத்துச் செல்லப்படுகின்றாள்.

> **உத்தமி இவளின் அழகில் உறைந்திடும் ஆண்கள் எவரும்**
> **தவங்களைத் தீயில் போட்டு தரணியை வஞ்சிப்பார்கள்4**

இன்னொரு பெண்ணின் அழகில் மயங்கி வேலையை, குடும்பத்தை, ஏன் தன்னை இழக்கும்எத்தனையோ ஆண்கள்போல, இங்கு ஒலேபெர் யூதித்தின் அழகில் மயங்குகிறான். இதைப் பயன்படுத்தி தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்துகிறாள் யூதித்து. யூதித்திற்குள்ள ஆயுதம் எதுவென்றால் அவளுடைய அழகிய தோற்றம், சாதுர்யப் பேச்சு, துணி மட்டுமே இஸ்ராயேல் மக்களைக் காப்பாற்றும் ஆயுதமாகப் பயன்படுத்துகிறார். இறைநம்பிக்கையோடு அவர் செயலாற்றுவதால் அனைத்தும் நலமாக முடிகின்றது என்று பார்க்கிறோம்.

> **இத்தனை நாட்களும் யான்புரிந்த - தவம்**
> **மக்களுக்காகவே சேரட்டும்5**

என்று மக்களுக்காகவே போராடி, தவமிருந்து, மன்றாடி இஸ்ராயேல் மக்களுக்கிருந்த பேராபத்தைத் தாங்கிக் கொண்ட பெண் என்பதை இந்நூல் வழி உணரமுடிகின்றது.

**இறைவனின் திட்டம்**

யூதித்தும் ஒலோபெரும் தனியே விடப்பட்டார்கள். பணியாளர்கள் எல்லாரும் வெளியே சென்றார்கள். யூதித்து தன் பணிப்பெண்ணிடம்படுக்கையறைக்கு வெளியில் காத்திருக்கும்படிக் கூறினார். இரவு நேரமாகிவிட்டதால் ஒலோபெரின் அலுவலர்கள் கூடாரத்திற்கு வெளியே தாழிட்டார்கள். இவ்வேளையில் யூதித்து ஆண்டவரை நோக்கி எல்லாம்வல்ல கடவுளே, எருசலேமின் மேன்மைக்காகவும், உமது உரிமைச் சொத்தாகிய இஸ்ராயேலுக்குத் துணைபுரியும் எங்கள் எதிரிகளை அழிக்க இதுவே தக்க நேரம் என்று வேண்டிக்கொண்டு... (அதிகாரம் 13-1-10)6 ஒலோபெர் அருகே சென்று தூணில்

மாட்டியிருந்த அவனுடைய வாளை எடுத்து இஸ்ராயேலின் கடவுளாகிய ஆண்டவரே எனக்கு இன்று வலிமை அளித்தருளும் என்று வேண்டியவாறு ஓலோபெரின் கழுத்தை இருமுறை வெட்டித் தலையைத் துண்டித்து உடலைப் படுக்கையிலிருந்து கீழே தள்ளிவிட்டுத் தலையை எடுத்துத் தன் பணிப்பெண்ணிடம் கொடுத்தார். பணிப்பெண் தன் உணவுப் பைக்குள் ஒலோபெரின் தலையை வைத்துக்கொண்டாள்.

இருவரும் எப்பொழுதும் போல வேண்டுதல் செய்ய பாளையத்தின் வழியாகச் சென்று தன் ஊராகிய பெத்தூலியாவிற்கு மலைமீது ஏறி வாயிலை அடைந்தார்கள். யூதித்து எளிதாகத் தன் திட்டத்தை நிறைவேற்றினார். ஏனென்றால் ஓலோபெர் குடிவெறியில் மயங்கிக் கிடந்ததால் அவன் தன்னிலை மறந்தவனாகக் காணப்பட்டான்.

### இறைவனின் வெற்றி

யூதித்து இஸ்ராயேல் மக்களைத் தொலைவிலிருந்தே, திறங்கள், வாயிலைத் திறங்கள், கடவுள் நம் கடவுள் நம்மோடு இருக்கிறார். நம் பகைவர்களுக்கு எதிராய்த் தம் ஆற்றலையும் இன்று வெளிப்படுத்தியுள்ளார் (அதிகாரம் 13-10)[7] என்று கத்தினார். மக்கள் அனைவரும் மூப்பர்கள் முதல் சிறியவர்கள் வரை யூதித்தைச் சுற்றி நின்று வரவேற்றார்கள். யூதித்து அவர்களிடம், கடவுளை வாழ்த்துங்கள், போற்றுங்கள் நம் பகைவர்களை என் கையால் இன்று இரவே அழித்துவிட்டார்[8] என்று அறிவித்தார் (அதிகாரம் 13-14).

பிறகு பையிலிருந்த ஓலோபெரின் தலையை வெளியே எடுத்துக்காட்டி இதோ அசீரியப் படைத் தலைவனின் தலை! அவன் குடிமயக்கத்தில் இருந்தையும் தன் கையால் வெட்டப்பட்டுள்ளான். அவன் மூலம் நான் எந்தக் கறைபடவோ, இறிவுறாவோ என்னுடன் பாவம் செய்யவில்லை என்றார். எல்லாரும் யூதித்தை வாழ்த்தினார்கள். மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும்விட நீ உன்னத ஆசி பெற்றவள். விண்ணையும் மண்ணையம் படைத்த கடவுளாகிய ஆண்டவர் போற்றி! என்று இஸ்ராயேல் மக்கள் கடவுளைப் போற்றினார்கள்.

மண்ணுள் வாழும் பெண்ணுள் நீயே ஆசிபெற்றவள்[9] என்ற வரியைப் பார்க்கும் போது லூக்கா நற்செய்தியில் வானதூதர் மரியாளுக்கு ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் (லூக்கா.1-28)[10] எனும் கூற்றுக்கு ஒப்பாகின்றது.

### முடிவுரை

பெண்கள் பலவீனர்கள் என்னும் எண்ணம் நீங்கியது. அருகதையற்றவர்கள் என்னும் நிலை மாறியது. நல்ல பெண் வாழ்நாள் முழுவதும் நல்லதையே செய்வாள். தீங்கு நினையாள், சுறுசுறுப்பாயிருப்பாள், எளியவருக்கு உதவி செய்வாள், பசித்தோருக்கு உணவிடுவாள். இறையச்சம் கொள்வாள் என்ற விவிலிய வார்த்தைகள் (நீதிமொழிகள் 31-1-31) யூதித்திற்குப் பொருந்தும்.

இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் கடவுள் அவர்கள் சார்பாகச் செயலாற்றுதல் அவர்களுக்குத் தோல்வியும், அழிவும் இராது, வெற்றியின் வாழ்வை அவர்கள் எப்போதும் கொண்டிருப்பர். ஆனால் நிபந்தனை என்னவென்றால், அவர்கள் கடவுளுக்கு விரோதமாகப் பாவம் செய்யாமல் இருக்க வேண்டும். அவ்வாறு பாவம் செய்யின் கடவுள் அவர்களைத் தோல்விக்கும், அழிவுக்கும் விட்டுவிடுவார்.

பெரும் எதிரியை முறியடிக்க பெரும்படை ஒன்று தேவையில்லை. அதற்கு ஓர் எளிய பெண்ணே போதும் என்னும் நம்பிக்கையை இந்நூல் காட்டுகிறது. ஆகவே இஸ்ராயேலர் கடவுள் மீது நம்பிக்கை வைக்கும்போது அவர் நிச்சயமாகக் காப்பாற்றுவார் என்பதை வலியுறுத்துகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ்.மைக்கேல் இருதயம், திருவிவிலிய விளக்கம், ப.130
2. லோட்டஸ் எடிசன், மீட்பரசி, ப.134
3. மேலது, ப.175
4. மேலது, ப.181
5. மேலது, ப.193
6. மேலது, ப.207
7. எஸ்.மைக்கேல் இருதயம், திருவிவிலிய விளக்கம், ப.144
8. லோட்டஸ் எடிசன், மீட்பரசி, ப.210
9. மேலது, ப.214
10. லோட்டஸ் எடிசன், மீட்பரசி, ப.215